ஏற்புக்காக ஐக்கிய நாடுகள் நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டது. ஐக்கியநாடுகள் நிறுவனம் இந்த அறிக்கைக்கு ஏற்பு அளித்த பின்னரே விவரங்கள் வெளியிடப்படலாம்.

திரு. கே. கந்தசாமி : மதுரை மாவட்டத்தில் நீர்வளம் குறைவாக இருக்கிறது. இதனுல் விவசாயம் பாதிக்கப்படும் நிலை இருக்கிறது. ஆகவே, கேரளத்தில் கடலில் வீணுகச் சென்று கலக்கும் தண்ணீரைத் தமிழகத்தில் மதுரை மாவட்டத்திற்குத் திருப்பிவிட கேரள அரசாங்கத்தோடு நம்முடைய அரசு பேச்சுவார்த்தை நடத்த திட்டம் உண்டா ? அது என்ன நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : மூலக் கேள்விக்கும் நீங்கள் கேட்கின்ற துணைக் கேள்விக்கும் எவ்வளவு தூரம் இருக்கிறது ?

தஞ்சை மாவட்டத்தில் வாய்க்கால்கள் தூர் எடுத்தல்

* 201 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்திலுள்ள "ஏ" பிரிவு வாய்ககால்கள் எத்தனை ஆண்டுக்கு ஒரு முறை தூர் வாரப்படுகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உழவர்கள் ஆண்டு தோறும் குடிமராமத்தின்கீழ் "ஏ" வகுப்பு வாய்க்கால்களில் தூர் வாரவேண்டும். ஆனுல் இப்பணி நீண்ட காலமாகச் செய்யப்படவில்லை. எனவே தஞ்சை மாவட்டத்தில் உள்ள "ஏ" வகுப்பு வாய்க்கால்களில் தூர் வாரும் பணியை நிறைவேற்ற அரசு ஒப்பளிப்பு வழங்கியது. அதன் விவரம் பின்வருமாறு :—

ஆண்டு.	தூர் வாரப்பட்ட அல்லது தூர் வாரப்பட வேண்டிய 'ஏ' வகுப்பு வாய்க்கால்களின் எண்ணிக்கை.	ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகை
1964	123	ரூ. 5 லட்சம்
1971-72	555	ரூ. 10 லட்சம்
1972-73	547	ரூ. 7·5 லட்சம்

[1972 டிசம்பர் 15

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் "ஏ" பிரிவு வாய்க்கால்களில் தூர் எடுக்கும் பணி 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் நடைபெறுகிறது என்று சொல்லப்படுகிறது. அமைச்சர் அவர்கள் விரிவான திட்டத்தை இங்கே எடுத்துச் சொல்லி, பல லட்சக்கணக்கான ரூபாய் ஒதுக்கப்பட்டு இருப்பதையும் சொல்லியிருக்கிறார்கள். இந்த "ஏ" பிரிவு வாய்க்கால்களில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தூர் எடுப்பது என்பதை 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை தூர் எடுப்பது என்று மாற்றி அமைத்தால், அங்கே இன்னும் அதிகமான அளவில் உற்பத்தியைப் பெருக்க வசதியாக இருக்கும். அதை மாற்றியமைக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தூர் வார வேண்டிய காரியங்கள் விவசாயிகள் செய்ய வேண்டியதொன்றாகும். மொத்தம் இருக்கின்ற 1,555 வாய்க்கால்களில் 137 வாய்க்கால்கள் தான் பொதுப்பணித்துறையினருக்குச் சொந்தமானது. நம்முடைய அரசாங்கம் இருக்கின்ற நிலைமையை அனுசரித்து கடந்த ஆண்டு 10 லட்ச ரூபாயும், இந்த ஆண்டு 7.5 லட்சம் ரூபாயும் ஒதுக்கி அந்தப் பணிகளைச் செய்து வருகிறது. அரசாங்கம் தேவையான பங்குக்கு அதிகமாகவே செலவு செய்து வருகிறது. 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தூர் வாரப்பட வேண்டுமென்று இருந்தாலும், கடந்த 2 ஆண்டுகளில் பல வாய்க்கால்கள் தூர் வாரப்பட்டிருக்கின்றன.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில், கோபி வட்டத்தில் உள்ள தடப்பள்ளி, அரக்கன் கோட்டை வாய்க்கால்கள் பல்லாண்டுகாலமாக தூர் எடுக்கப்படாத காரணத்தால் பாசனத்திற்கு லாயக்கு இல்லாத நிலையில் இருக்கின்றன. அதை விரைவில் செப்பனிட அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தடப்பள்ளி, அரக்கன் கோட்டை வாய்க்கால்கள் சேதப்பட்டு இருக்கின்றன. அதிவிரைவில் அது செப்பனிடப்படும். தண்ணீர் போதுமானதாக வரவில்லை என்ற குறை என்னிடத்தில் சொல்லப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த மாதிரி தனிக் கேள்வி போடக் கூடாது. குறிப்பிட்ட அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதால் அவர் பதில் சொல்கிறார்.